ஸ்ரீராமஜெயம்

# பஞ்சவடீ க்ஷேத்திரம்

புதுச்சேரி – திண்டிவனம் நெடுஞ்சாலையில் திண்டிவனத்திலிருந்து 29 வது கிலோமீட்டரிலும், புதுச்சேரியிலிருந்து 11 கி.மீ. தூரத்திலும் பாப்பாஞ்சாவடி என்கிற பஞ்சவடீ க்ஷேத்திரம் அமைந்துள்ளது.

1999ம் ஆண்டு ஜூன் மாதம் 24ந்தேதி சத்வா குரூப் நிறுவத்தைச் சேர்ந்த தலைவர் ஸ்ரீமான் S.சந்தானம் அவர்கள் தன் நிலத்தில் ஸ்ரீமான் S.ரமணி அண்ணா அவர்களைக் கொண்டு பூமி பூஜை செய்வதற்கு பார்வையிட்டார்கள். அப்போது இந்த நிலத்தில் ஸ்ரீமான் ரமணி அண்ணா அவர்கள் கால் பதித்து சில நிமிடங்கள் கழித்து ஒரு தெய்வீக சக்தி தம்மை ஆட்கொண்டு பீரவாகம் செய்வதை உணர்ந்தார். சற்று நேரத்தில் அவருக்கு அசரீரியாக ஒரு தெய்வீகக்கட்டளை கேட்டது. அவர் அதை அசட்டை செய்தார். மீண்டும் மீண்டும் ஸ்ரீ ஆஞ்ஜநேய ஸ்வாமி திரு.ரமணி அண்ணா அவர்களுக்கு தனக்கு ஓர் ஆலயம் இந்த பூமியில் அமைக்கும்படி கட்டளையிட்டார். மெய்சிலிர்த்துப்போன அவர் ஸ்ரீமான் சந்தானம் அவர்களிடம் மேற்படி ஆஞ்ஜநேயர் ஆக்ஞையை விளக்கிக் கூறினார். திரு.சந்தானம் ஐயங்கார் அவர்கள் மிக்க பூரிப்புடன் தங்கள் ஆக்ஞைப்படி ஆலயம் கட்டுவதற்கான பூமியை தான் இலவசமாக வழங்குவதாக ஒப்புக்கொண்டார்.

மேற்படி சம்பவம் பிரம்மையா அல்லது உண்மையானதா என்று ஊர்ஜிதப்படுத்த மறுநாள் காலை ஸ்ரீமான் S.சந்தானம் அவர்களுடன் சென்னை நங்கநல்லூர் ஸ்ரீ ஆதிவியாதிகர ஆஞ்ஜநேய ஸ்வாமிக்கு முன் திருவுளச்சீட்டு செலுத்தி நேற்று நடந்த நிகழ்ச்சி தெய்வீகக்கட்டளைதான் என்று ஊர்ஜிதமாகியது.

தாம் மேற்கொள்ளவிருக்கும் இந்த முயற்சி தெய்வீகக் கட்டளையின் பேரில்தானா என்பதைக் கண்டறிய திரு.ரமணி அண்ணா. திரு.சந்தானம் ஐயங்கார் மற்றும் சில பக்தர்களுடன் கேரள மாநிலத்தில் பையனூர் என்ற கிராமத்தில் வசித்து வந்த ஸ்ரீ K.நாராயண பொதுவாள் என்ற ஜோசியரைச் சந்தித்து அஷ்டமங்கள தேவப்பிரசனம் பார்க்க அனுமதி கோரினர். வயது முதிர்ந்தவரான திரு.பொதுவாள் அவர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் இந்த பிரச்னம் பார்த்தார். தேவப் பிரச்னத்தில் ஆச்சரியமான உண்மைகள் வெளிப்பட்டன. அதாவது பாப்பாஞ்சாவடி என்கின்ற இந்த கிராமம் மிகத் தொன்மை வாய்ந்தது. பல நூற்றாண்டுகளாக மஹரிஷிகளும், யோகிகளும், சித்தர்களும் இந்த கிராமத்தில் நீண்ட தவம் செய்து புனிதப்படுத்தி உள்ளனர்.

இவ்விடத்தில் பூமிக்கடியில் ஸ்ரீ ஆஞ்ஜநேய ஸ்வாமி பஞ்சமுக ஸ்வரூபனாக ஸ்ரீராமஜெயம் ஓதிக்கொண்டு பல்லாண்டு பல்லாண்டாக தவம்செய்து வருகிறார். ஸூக்ஷ்ம ரூபத்தில் (கண்ணுக்குத் தெரியாமல்) தவம் புரியும் ஆஞ்ஜநேய ஸ்வாமி தற்போது ஸ்தூல வடிவத்தில் (Physical Form) காயில் கொள்ளத் தீர்மானித்து விட்டார் என்று இந்த தேவப் பிரச்னம் விளக்கியது.

36 அடி உயரத்தில் பஞ்சமுக ஸ்வருபனாக இந்தப் பஞ்சவட க்ஷேத்திரத்தில் தனக்கும் தன் பிரபுவான ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கும் ஓர் ஆலயம் அமைக்க ஸ்ரீ ஆஞ்ஜநேய ஸ்வாமி விரும்புகிறார் என்று மிகத் தெளிவாக தேவப்ப்ரச்னம் விளக்கியது.

பஞ்சவட க்ஷேத்திரத்தில் இதுபோன்ற ஆலயம் அமைவதில் திருமலை திருவேங்கடவனுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு என்றும், திருவேங்கடமுடையான் ஸந்நிதியில் விடியற்காலை பூஜையில் கலந்து கொண்டு அவன் திருமுன்னேயே ஆலய கட்டுமானத்திற்கான ப்ரார்த்தனை செய்யும்படியும் தேவப்ப்ரச்னம் உணர்த்தியது. அதன் படிக்கே August 18, 1999ல் திரு.ரமணி அண்ணா, திரு.சந்தானம் ஐயங்கார் மற்றும் சில பக்தர்கள் திருமலை வேங்கடாசலபதி ஸந்நிதியில் பூஜைகள் செய்து தங்கள் வேள்வியைத் துவக்கினர். திருமலை வேங்கடாசலபதி ப்ரச்னத்தின் மூலம் விளக்கிய மற்றொரு முக்கியமான விஷயம் “தான் விரும்பிய காலத்தில் தானே பஞ்சவட க்ஷேத்திரத்திற்கு எழுந்தருள்வேன்” என்பதுதான். திரு.ரமணி அண்ணா மற்றும் சில பக்தர்கள் சேர்ந்து 2000–ம் ஆண்டு ஜனவரியில், ஆலயம் அமைக்க Panchamukha Sri Jayamaruthi Seva Trust என்ற அமைப்பையும், சமுதாய அறக்கட்டளை மற்றும் தர்மகாரிய பணிகளுக்காக Panchamukha Sri Jayamaruthi Charitable Trust என்ற அமைப்பையும் உருவாக்கினார்கள்.

கேளம்பாக்கத்தில் உள்ள சிற்பகலைக் கூடத்திற்கு உரிமையாளர் திரு.முத்தையா ஸ்தபதியார் என்பவரின் சிற்பக்கலை நிபுணரின் ஒத்தாசையுடன் சிறுதாமூர் என்ற கிராமத்திலிருந்து 150 டன் எடை கொண்ட 40 அடி நீளம், 20 அடி அகலமுள்ள ஒரு பெரிய கல்லைத் தேர்ந்து எடுத்து கேளம்பாக்கத்திற்கு கொண்டு சேர்த்தனர்.

2001 முதல் 2003 வரை திரு. முத்தையா அவர்களின் ஸ்வர்ணம் சிற்ப கலாசாலையில் பஞ்சமுக ஸ்ரீ ஆஞ்ஜநேய ஸ்வாமி உருவானார். June 2003 ம் ஆண்டு கேளம்பாக்கத்திலிருந்து பஞ்சவட க்ஷேத்திரம் எழுந்தருளினார். 2003 June-12ல் 36 அடி விஸ்வரூப ஜெயமங்கள பஞ்சமுக ஸ்ரீ ஆஞ்ஜநேய ஸ்வாமி தன்னைத் தன் ஆதார பீடத்தில் நிலை நிறுத்திக் கொண்டார்.

இதன்பின் ஆலயக்கட்டுமானப் பணிகள் பஞ்சமுக ஸ்ரீ ஜெயமாருதி ட்ரஸ்டின் மூலம் பூர்த்தி செய்யப்பட்டு 2007 January 31 அன்று ஆலய கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்த ஆலயம் ஒரு தனியார் கோவில். இதனை பஞ்சமுக ஸ்ரீ ஜெயமாருதி ஸேவா டிரஸ்ட்தங்கள் முழுப் பொறுப்பிலும், சொந்தச் செலவிலும் நிர்வகித்து வருகிறார்கள்.

2007ஆம் ஆண்டு பஞ்சவட க்ஷேத்திரத்தில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தில் பல புண்ணிய நதிகளில் இருந்து தீர்த்தம் கொணரப்பட்டு யாகசாலை பூஜையில் வைத்து பின் ஸந்நிதி கலசங்களுக்கு ஸம்ப்ரோக்ஷணம் செய்யப்பட்டது. காவிரீ,

பாலாறு, தாமிரபரணி, கிருஷ்ணா, கோதாவரி, கங்கை, யமுனை, போன்ற புண்ணிய நதிகளின் தீர்த்தங்கள் புனிதமான இந்த வைபவத்தில் ஆசி வழங்கின.

ஐந்து நாட்கள் நடைபெற்ற இந்த வைபவத்தின் போது லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர். **31.01.2007** அன்று மட்டும் சுமார் **1.5** லட்சம் பக்தர்களுக்கு நுனிவாழை இலையில் பகவத் பிரசாதமாக அன்னதானம் வழங்கப்பட்டது.

## இராஜகோபுரம்

அழகான ஐந்து நிலை இராஜகோபுரம் **2007** ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டு **14.09.2008** அன்று வெகு விமரிசையாக கும்பாபிஷேகம் நடைபெற்றது. **14.09.2007** தேதியிலிருந்து பக்தர்களுக்கு வாழைஇலையில் அன்னதான கூடத்தில் அமரவைத்து அன்னதானம் இது நாள் வரையிலும் வழங்கப்படுகிறது.

தெய்வக் கட்டளையின்பேரில் ஸ்வர்ண ஸ்ரீராம பாதுகைகள் வடிவமைக்கப்பட்டு பாரத தேசத்தின் அனைத்துப் புண்ணிய க்ஷேத்திரங்களிலும் புண்ணிய தீர்த்தங்களிலும் ஸங்கல்ப ஸ்நானம் செய்து பஞ்சவடீ க்ஷேத்திரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு இங்கு வரும் பக்தர்களுக்கு திருவருள் புரிகின்றன. மிகவும் புனிதமான இந்த ஸ்ரீராமபாதுகைகள தலைக்காவிரியில் இருந்து காவிரி, நாஸிகில் இருந்து கோதாவரி, மந்திராலயத்தில் இருந்து துங்கபத்ரா, ஜபல்பூரில் நர்மதா, ப்ரயாகையில் திரிவேணி ஸங்கமம் கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகள், அயோத்யாவில் சரையூ மற்றும் திருநெல்வேலியில் தாமிரபரணி போன்ற புண்ணிய நதிகளில் ஸங்கல்ப நீராட்டம் கண்டும் கேரள மாநிலத்திலுள்ள அனைத்து திவ்ய தேசங்களிலும் மற்ற தெய்வத் திருத்தங்களிலும் ஆராதித்து மிகுந்த சான்னித்யம் பெற்றன.

**2019** ஜூன் மாதம் **23**ம் தேதி நடைபெற உள்ள இந்த மஹா ஸம்ப்ரோக்ஷணத்திற்கு பாரத தேசத்தில் உள்ள அனைத்து புண்ணிய நதிகளில் இருந்தும் தீர்த்தம் கொணரப்பட்டுள்ளது. இந்த க்ஷேத்திரத்திற்கு திருமலை ஸ்ரீஸ்ரீநிவாசப் பெருமாள் ஸ்ரீதேவி பூதேவியுடன் **2009 March 15** மற்றும் **16** தேதிகளில் நேரில் எழுந்தருளி திருமலையில் அன்றாடம் நடைபெறும் அனைத்து ஸேவைகளையும் இச்க்ஷேத்திரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் விஸ்வரூப ஜயமங்கள பஞ்சமுக ஸ்ரீ ஆஞ்ஜநேயஸ்வாமி, வலம்புரி ஸ்ரீமஹாகணபதி, பட்டாபிஷேக ஸ்ரீராமசந்த்ர மூர்த்தியுடன் “சேத்தி ஸேவையை” கண்டருளியது இவ்வாலயத்திற்கு முதல் முறையாக எந்த ஆலயத்திலும் கண்டிராத ஒரு முக்கிய சிறப்பு அம்சமாகும்.

பஞ்சவடீ க்ஷேத்திரத்தில் பஞ்சமுக ஸ்ரீ ஆஞ்ஜநேய ஸ்வாமி ஸந்நிதி தவிர ஜெயமங்கள வலம்புரி ஸ்ரீ மஹா கணபதி மற்றும் பட்டாபிஷேக ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கு அற்புதமான தனி ஸந்நிதிகள் உள்ளன. தேவப்ரச்னத்தில் தான் தெரிவித்தபடியே இந்த **2019**ம் ஆண்டு பஞ்சவடீ க்ஷேத்திரத்தில் தனக்கென ஓர் உன்னத ஸந்நிதி கொள்ள ஸ்ரீவேங்கடாசலபதி மூலமூர்த்தியாக திருமலையிலிருந்து பஞ்சவடீ க்ஷேத்திரம் எழுந்தருளியுள்ளார். மே மாதம் **10**ந் தேதி வெள்ளிக்கிழமை

காலை 6.30 மணிமுதல் 8.00 மணிக்குள் இந்த திவ்யமங்கள திருமேனியை பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது.

இந்த பிரதிஷ்டையை வைகாநச பிரதிஷ்டாதிலகம் பாப்பாக்குடி ஸ்ரீமான்.வெங்கடேச பட்டாச்சாரியார் அவர்கள் செய்து வைக்க உள்ளார்.

வருகின்ற ஜுன் 23ந்தேதி நடைபெற உள்ள மஹா ஸம்ப்ரோக்ஷணத்தின் போது இந்த நூதன ஸந்நிதிக்கும் மஹாசம்ப்ரோக்ஷணம் செய்யப்பட்டு அனைத்து பக்தர்களுக்கும் திருவருள்புரிய உள்ளார்.

லோகத்திலுள்ள அனைத்து ஜீவராசிகளின் க்ஷேமார்த்தத்தையும், மங்களத்தையும் அடைந்து சுபீட்சமாக இருப்பதே இவ்வாலயத்தை முழுமையாக நிர்வகித்து வரும் பஞ்சமுக ஸ்ரீ ஜெயமாருதி ஸேவா ட்ரஸ்டின் நோக்கமாகும்.

இந்த மஹா ஸம்ப்ரோக்ஷணத்தை வைகானஸ ஆகம சாஸ்த்திரத்தில் மிகுந்த பாண்டித்யம் பெற்ற கீழ்கண்ட மகனீயர்கள் அன்வயிக்க உள்ளார்கள். ஸ்ரீவைகாநஸ ப்ரதிஷ்டாரத்னம் ஹரித்வார மங்கலம் ஸ்ரீ S.D.ராஜம் பட்டாச்சார்யார், சொல்லின் செல்வர், சொற்பொழிவு சுடர், வைகாநஸ ஞானபாஸ்கர சேங்காலிபுரம், ஸ்ரீ உ.வே.S.B.கல்யாணராம பட்டாச்சாரியார், ஸ்ரீவைகாநஸ பகவத் சாஸ்தர வித்வான் கும்பகோணம் ஸ்ரீ.உ.வே.ரகுநாத பட்டாச்சாரியார், ஸ்ரீவைகாநஸ ப்ரதிஷ்டாதிலகம் சர்வசாதகம், பாப்பாக்குடி ஸ்ரீ உ.வே.வெங்கடேச பட்டாச்சாரியார், மற்றும் க்ஷேத்திரத்தின் ஸ்தல பட்டர் ஸ்ரீ.உ.வே.ஸ்ரீதர் பட்டாச்சாரியார் மற்றும் பல வைகாநஸ பண்டிதர்கள் நடத்தி வைக்க உள்ளார்கள்.

பஞ்சவடீ க்ஷேத்திரத்தில் சம்ப்ரோக்ஷணத்தை வேத சாஸ்திர ஆலோசகர் ப்ரம்மஸ்ரீ S.ரமணி அண்ணா அவர்களின் முன்னிலையில் நடத்தப்படவுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த மஹா சம்ப்ரோக்ஷணமானது "தர்மாத்மா" ஸ்ரீமான் டாக்டர்.S.யக்ஞசுப்ரமணியன் அவர்களின் பரிபூரண நல்லாசிகளுடன் நடைபெறுவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

லோக க்ஷேமார்த்தமாக நடைபெறும் இந்த மஹா ஸம்ப்ரோக்ஷணத்தில் எல்லோருக்கும் எல்லா மங்களங்களும் ஏற்பட கீழ்கண்ட மகான்கள் அருளாசி வழங்கியுள்ளார்கள்.

தக்ஷிணாம்னாய ஸ்ரீ ச்ருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீஸ்ரீஸ்ரீ பாரதி தீர்த்த மஹாஸ்வாமிகள் ஸ்ரீசாரதாம்பாளின் பரிபூர்ண க்ருபையுடனும், ஸ்ரீமத் அஹோபிலமடம் ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்மஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண்

சடகோப ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகன், ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிகள், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், மைசூர் ஸ்ரீ பரகாலமட சர்வதந்த்ர ஸ்வதந்ர ஜீயர் ஸ்வாமிகளும் அனுக்ரஹித்துள்ளார்கள்.

பஞ்சவட க்ஷேத்திரத்திற்கு வரும் அனைத்து பக்தர்களுக்கும் காலை 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை எம்பெருமானின் ப்ரசாதம் வழங்கப்படுகிறது.

அன்றாடம் பக்தர்களுக்கு **Panchamukha Sri Jayamaruthi Charitable Trust** மூலம் நுனிவாழை இலையில் அன்னதானம் வழங்கப்படுகிறது. மேலும் நோய்கள் தீர்க்க மருத்துவ உதவி, ஏழைக் குழந்தைகளுக்கு புத்தகம், சீருடை வழங்கப்படுகிறது. ஒரு கோசாலையும் இங்கு நேர்த்தியாக நிர்வகிக்கப் படுகிறது. **Panchamukha Sri Jayamaruthi Seva Trust** ன் மூலம் தர்மம் தழைத்தோங்க ஓர் வேத பாடசாலை மூலம் 30 மாணாக்கர்களுக்கு வேத பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

பஞ்சவட க்ஷேத்திரத்தில் 10.5.2019 வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்குமேல் 8.00 மணிக்குள் ஸ்ரீ வேங்கடாசலபதி மூலவர் **ஸ்தாபனம்** செய்யப்பட்டது. இறைவன் திருவருளால் மஹா சம்ப்ரோக்ஷணம் 23-06-2019 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு மேல் 10-30 மணிக்குள் நடைபெற்றது. சுமார் 3 லட்சம் பக்தர்களுக்கு மேல் இந்த மஹா ஸம்ப்ரோக்ஷணத்தின்போது பகவத் பிரசாதமாக நுனி வாழை இலையில் அன்னதானம் வழங்கப்பட்டது.